கேட்கப்பட்டு, பதிலும் சொல்லியிருக்கிறார்கள். 10 கேள்விகளை 20 நிமிடங்களில் முடித்துவிட்டு போய்விடலாம் அல்லது 30 நிமிடங்களில் முடித்துவிடலாம். ஒரு மணி நேரம் ஆகிறது. பேசுவதற்கு ஒரு வாய்ப்பு கொடுத்துவிட்டால் திரும்ப mike வாங்குவதற்கு அவ்வளவு கஷ்டமாக இருக்கிறது. அதிகபட்சம் 10 second-ல் ஒரு கேள்வி இருக்க வேண்டும். 30 second-ல் பதில் இருந்தால்தான் துணைக் கேள்விக்கு கூட இரண்டு பேருக்கு வாய்ப்பு கொடுக்க முடியும். அந்த அடிப்படையில் போனால், ஒருவர் அல்லது இருவருக்கு வாய்ப்புக் கொடுப்பேன். இல்லையென்றால், உடனே cut பண்ணிவிடுவேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சதாசிவம் அவர்கள். (குறுக்கீடு) நீங்கள் யாரும் வாய்ப்புக் கேட்கவில்லையே!

திரு. S. சதாசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூர் தொகுதி, வீரக்கல்புதூர் பேரூராட்சியில், 7-வது வார்டில் ஆயிரம் பேர் குடியிருக்கிறார்கள். அருகிலுள்ள வார்டில் இருந்துதான் தண்ணீர் வருகிறது. சேலம் மாவட்ட பொறுப்பு அமைச்சர், மூத்த அமைச்சர் அவர்கள், 7-வது வார்டில் 30 ஆயிரம் லிட்டர் கொள்ளளவுக் கொண்ட நீர்த்தேக்கத் தொட்டியும், P.N. பட்டி பஞ்சாயத்து, தாழையூர் 8-வது வார்டில் 30 ஆயிரம் லிட்டர் கொள்ளளவுக் கொண்ட நீர்த்தேக்கத் தொட்டியும் அங்கு குடியிருக்கிற மக்களுக்குக் கட்டித் தருவார்களா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இரண்டு நாட்களுக்கு முன்பு இந்தக் கேள்வி கேட்கப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அப்பொழுது சபையில் இல்லை என்று நான் கருதுகிறேன். P.N. பட்டி பேரூராட்சிக்குக் குழாய் அமைக்கின்ற இடம் பொதுப் பணித் துறையினுடைய இடமாக இருக்கிறது. அவர்களிடம் அனுமதி கேட்டு, குழாய் பதித்து உடனடியாகத் தண்ணீர் வழங்கப்படும் என்று இரண்டு நாட்களுக்கு முன்பாகச் சொல்லியிருக்கிறேன். எனவே, அனுமதியைப் பெற்று நிச்சயமாக, அது உடனடியாகச் செய்து தரப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.*

திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம், கும்பகோணம் தலைமை அரசு மருத்துவமனையில் குடிநீர் தட்டுப்பாடு அதிகமாக இருக்கிறது. அங்கே உள் நோயாளிகள் 1,100 பேரும், புறநோயாளிகள் 3,000 பேருக்கு மேலும் சிகிச்சைக்கு வருவதால் மாண்பிற்கினிய அமைச்சர் அவர்கள், ஒரு இலட்சம் லிட்டர் கொள்ளளவோ அல்லது அதற்கு அதிகமாகவோ உள்ள ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டிக் கொடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவமனையிலே தண்ணீர் பற்றாக்குறையாக இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அதைக் கவனத்தில் கொண்டு, அதிகாரிகளை அனுப்பி அதை எப்படிச் செய்ய முடியும் என்பதை அறிந்து அவர்களுக்குத் தகுந்த பதில் விரைவாக சொல்லப்படும். ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்பட வேண்டுமென்று சொன்னால்,* estimate *செய்வதற்கு எப்படியும் ஒரு மாதம் முதல் இரண்டு மாதங்கள் ஆகிவிடும். எனவே, அதற்கான முயற்சி எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 123, மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. சிவகுமார், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

123—

இரயில்வே மேம்பாலம்

***37814—திரு. ச. சிவகுமார்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலம் தொகுதி, பெரியதச்சூர் அருகில் இரயில்வே மேம்பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, பொதுப் பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மாவட்ட இதர சாலையான பேரணி–பெரியதச்சூர் சாலையில் இரயில்வே கடவு உள்ளது. இக்கடவின் வழியாகச் செல்லும் இரயில்வே போக்குவரத்தின் செறிவு–rail wagon unit–77,384 ஆகும். இரயில் போக்குவரத்துச் செறிவு TVU ஒரு இலட்சத்திற்கு குறைவாக உள்ளதால், தற்போதைய போக்குவரத்தின் அடிப்படையில் இரயில்வே மேம்பாலம் அமைப்பதற்குச் சாத்தியக்கூறு இல்லை. இரயில் போக்குவரத்துச் செறிவு அதிகமாக ஏற்படுகிறபோது இரயில்வே மேம்பாலம் அமைக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. சிவகுமார் அவர்கள்.

திரு. ச. சிவகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரணி–பெரியதச்சூர் செல்லும் சாலையின் குறுக்கே இரயில்வே கேட் உள்ளது. இந்தச் சாலையை பெரியதச்சூர், பேரணி, சே. கொத்தமங்கலம், எஸ்சாலம், நியமூர் உள்ளிட்ட 30–க்கும் மேற்பட்ட கிராம மக்கள் பயன்படுத்தி வருகிறார்கள். விழுப்புரம்–திருவண்ணாமலை, விழுப்புரம்–செஞ்சி சாலைகளில் வாகன விபத்து ஏற்பட்டு சாலை மூடப்படும் சூழ்நிலையில் மாற்றுச் சாலையாக இந்த பெரியதச்சூர்–பேரணி சாலை உள்ளது. இந்தச் சாலையில் உள்ள இரயில் பாதை வழியாக சென்னையிலிருந்து திருச்சி, கன்னியாகுமரி, திருநெல்வேலி, மதுரை போன்ற தென் மாவட்டங்களுக்குச் செல்லும் இரயில்களும், புதுச்சேரி, கும்பகோணம் உள்ளிட்ட பகுதிகளுக்குச் செல்லும் இரயில்களும் அடிக்கடி செல்கின்றன. இதனால் இந்த இரயில்வே கேட் அடிக்கடி மூடப்படுகிற சூழ்நிலை உள்ளது. இதனால் இப்பகுதியில் வாகனங்கள் அதிகளவில் அணிவகுத்து நிற்கின்றன. பள்ளி செல்லும் மாணவர்கள், முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனை செல்லும் நோயாளிகள் இரயில்வே கேட்டைத் திறக்கும் வரை காத்திருக்கிறார்கள். எனவே, இப்பகுதியில் இரயில்வே மேம்பாலம் அமைக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

2024 ஜூன் 29]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பலமுறை அந்த வழியாக நானும் சென்றிருக்கிறேன். எனவே, அந்த இரயில்வே கேட்டை நானும் அறிவேன். அரசாங்கத்திற்கு என்று சில விதிகள் இருக்கின்றன. விதிகளுக்குட்பட்டுத்தான் இரயில்வே மேம்பாலம் கட்டப்படும். மாநில அரசாங்கம் முழுமையாகச் செலவு செய்வது அல்ல. ஒன்றிய அரசாங்கம் 50 percent, மாநில அரசாங்கம் 50 percent போட்டு கட்டுகின்ற பாலம் என்கின்ற அடிப்படையில் சில விதிமுறைகள் எல்லாம் வகுக்கப்பட்டிருக்கின்றன. அந்தக் கடவிலே ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட இரயில் போக்குவரத்து இருந்தால்தான் மேம்பாலம் கட்டப்படும். அதனால்தான் இன்னும் சிறிது காலத்தில் கூடுதலாக, passenger இரயில்கள் செல்கின்ற நிலை ஏற்பட்டால், அதைக் கட்டுகிறோம் என்றுதான் சொல்லியிருக்கிறோம்; கட்ட முடியாது என்று சொல்லவில்லை. அந்தக் காலக்கட்டம் வரும்போது, கட்டாயம் அந்த மேம்பாலம் கட்டப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. சிவகுமார் அவர்கள்.

முற்பகல் 9–45

திரு. ச. சிவகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெடிமொழியனூர் செல்லும் சாலையின் குறுக்கே இரயில்வே கேட் உள்ளது. இந்தச் சாலையை, தென்புத்தூர், ரெட்டணை, கொங்கரப்பட்டு, வல்லம் உள்ளிட்ட 20–க்கும் மேற்பட்ட கிராம மக்கள் செஞ்சி சென்றுவர பயன்படுத்துகிறார்கள். இப்பகுதிவாழ் விவசாயிகள் உற்பத்தி செய்யும் விவசாயப் பொருட்களை எடுத்துச் செல்வதற்கு மிகவும் சிரமமாக உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் அதனை மறுபரிசீலனை செய்து, விரைவாக செய்து தாருங்கள் என்றுதான் கேட்க வேண்டும்.

திரு. ச. சிவகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை, இது மற்றொரு மேம்பாலம் குறித்து. மாணவர்கள்,

பொதுமக்கள், முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனை செல்லும் நோயாளிகள் இரயில்வே கேட் திறக்கும்வரையில் காத்திருக்க வேண்டியுள்ளது. எனவே, இப்பகுதியில் இரயில்வே மேம்பாலம் அமைக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரின் கருத்து ஏற்புடையது; இல்லையென்று மறுக்கவில்லை. அதுபோன்ற கிராமங்கள் இருப்பது உண்மை; அவ்வாறு சாலைகள் இருப்பதும் உண்மை. இரயில் போக்குவரத்து செறிவு அதிகம் இருந்தால்தான், அந்த மேம்பாலத்தைக் கட்ட முடியும்; இல்லையென்றால், இரயில்வே மேம்பாலத்தைக் கட்ட முடியாது. இரயில்வே துறையில் அனுமதியே கொடுக்கமாட்டார்கள். மாநில அரசாங்கத்தின் முழு நிதியை செலவிடுவதாக இருந்தாலும், இரயில்வே துறையிடம் அனுமதி பெற வேண்டிய நிலை உள்ளது. ஒரு இலட்சம் போக்குவரத்து செறிவு இருந்தால்தான் இரயில்வே துறையில் அனுமதி அளிக்கிறார்கள். இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை வைத்து, மீண்டும் ஒரு முறை துறையின்மூலம் கடிதம் எழுதப்படும். NH அனுமதி கொடுத்துவிட்டார்களேயானால் அதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. G.V. மார்க்கண்டேயன் அவர்கள்.

திரு. G.V. மார்க்கண்டேயன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டத்தில், விளாத்திகுளம் சட்டமன்றத் தொகுதி, நெடுஞ்சாலைத் துறை நான்கு உட்கோட்டங்களைக் கொண்டுள்ளது. ஏறக்குறைய 700 கி.மீ. சாலைகள் விளாத்திகுளம் தொகுதியில் உள்ளன. அனைத்து சாலைகளுமே மாவட்ட இதர சாலைகளாக இருக்கின்றன. 700 கி.மீ. சாலைகளில் ஒரு சாலைகூட Major District Road ஆக இல்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பல்வேறு மாவட்டங்களில் சாலைகளை 7 மீட்டர் சாலைகளாகவும், 5½ மீட்டர் சாலைகளாகவும், பெரிய சாலைகளாகவும், super specification method-ல் அமைத்துக்கொடுக்கிறார்கள்.

2024 ஜூன் 29]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், குறிப்பிட்ட எந்த சாலையில் என்ன பணிகள் என்று குறிப்பிட்டுக் கேட்க வேண்டும்.

திரு. G.V. மார்க்கண்டேயன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சரி. எங்கள் தொகுதியில் விளாத்திகுளத்திலிருந்து பெருநாழி செல்கின்ற சாலை, விளாத்திகுளத்திலிருந்து எப்போதும்வென்றான் செல்கின்ற சாலை, நாகலாபுரத்திலிருந்து இருக்கன்குடி செல்கின்ற சாலை ஆகிய 3 சாலைகளையும் Major District Road ஆக சேர்க்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய நெடுஞ்சாலை ஆணைய சாலை, தேசிய நெடுஞ்சாலை, மாநில நெடுஞ்சாலை, மாவட்ட இதர சாலை, மாவட்ட முக்கியச் சாலை ஆகிய வகைப்பாடுகளில் அதிக அளவிலான சாலைகளைக் கொண்டது தூத்துக்குடி மாவட்டம். அப்பகுதியில் அதிக அளவிலான தொழிற்சாலைகள் +6இருக்கின்றன. எனவேதான், அதிக அளவிலான சாலைகள் அப்பகுதியில் இருக்கின்றன. இதை உணர்ந்துதான் அதனை 2 divisions ஆக ஆக்க வேண்டும். ஒரு மாவட்டத்திற்கு ஒரு division தான் இருக்க வேண்டும்; கூடுமானவரையில், ஒரு மாவட்டத்திற்கு ஒரு division தான் வைக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் இதனை 2 divisions ஆக அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை வந்ததன் அடிப்படையில், ஆய்வு செய்து கோவில்பட்டியை தலைமையிடமாகக் கொண்டு, மேலும் ஒரு division–ஐ உருவாக்க வேண்டுமென்று அரசின் சார்பாக முடிவு செய்யப்பட்டது.மாவட்டத்தின் இரண்டு மாண்புமிகு அமைச்சர்கள், திருமதி கீதா ஜீவன் மற்றும் திரு. அனிதா ராதாகிருஷ்ணன் ஆகியோர் அவற்றிற்கு இரண்டு divisions வைக்க வேண்டும் என்று பரிந்துரை செய்திருக்கிறார்கள். அதனடிப்படையில் கோவில்பட்டியைத் தலைமையிடமாகக்கொண்டு ஒரு division அமைத்துவிட்டால், மாண்புமிகு உறுப்பினர் திரு. மார்க்கண்டேயன் அவர்கள் கூறிய அனைத்துப் பிரச்சினைகளையும் தீர்ப்பதற்கு வாய்ப்பாக அமையும். இந்த ஆண்டே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியோடு இந்த division பிரிக்கப்படும்.

[2024 ஜூன் 29

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. ராமச்சந்திரன் அவர்கள்.

திரு. தி. ராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி தொகுதியில், திருப்புனவாசல், ஓரியூரில் ஓர் உயர்மட்ட மேம்பாலம் வேண்டுமென்று கேட்டிருந்தேன். அதனை நிறைவேற்ற ஆணை பிறப்பித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி தொகுதியில், இராமநாதபுரம், சிவகங்கை, புதுக்கோட்டை ஆகிய இந்த மூன்று மாவட்டங்களையும் இணைக்கும் விதமாக களபம் ஊராட்சியில், அதவத்தூரில் ஓர் உயர்மட்டப் பாலமும், பெருமருதூர்—புத்துவிளை இணைக்க வெள்ளாற்றின் குறுக்கே ஓர் உயர்மட்ட பாலமும் அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ராமச்சந்திரன் அவர்கள், பல பாதைகள், பல தெருக்கள், பல சாலைகள், பல பாலங்கள் வேண்டுமென்று நேரடியாக என்னிடத்தில் மனு கொடுத்திருக்கிறார்கள். அவை பரிசீலனையில் இருக்கின்றன. இந்த ஆண்டின் நிதிநிலைமை அறிந்து, ஒன்றன்பின் ஒன்றாக அரசின் சார்பாக பணிகள் தொடங்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ.சு.தி. சரவணன் அவர்கள்.

திரு. பெ.சு.தி. சரவணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலசப்பாக்கம் தொகுதிக்குட்பட்ட ஜவ்வாது மலைக்குச் செல்ல வேண்டுமென்றால், போளூர் மையப் பகுதியான பஜார் வழியாகத்தான் செல்ல முடியும். அங்கு அதிக அளவிலான கிராமங்கள் இருப்பதால் கரும்பு லோடு வாகனங்களால் ஏற்படும் போக்குவரத்து நெரிசல் காரணமாக கால விரயம் ஏற்படுகிறது. இதைக் கருத்தில்கொண்டு, போளூர் வழியாக ஜவ்வாது மலைக்கு

2024 ஜூன் 29]

ஒரு புறவழிச் சாலை அமைத்துத் தரப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 9–50

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் சொல்கிற ஜவ்வாது மலை பற்றி மாண்புமிகு அவை முன்னவர் அவர்களும் நானும் நன்கு அறிந்தவர்கள். ஏறத்தாழ 260–க்கும் மேற்பட்ட கிராமங்கள் அந்த மலையில் இருக்கின்றன. அந்த மலைக்குப் போகவேண்டுமானால், போளூர் நகர்ப் பகுதி வழியாகத்தான் போக முடியும். போளூர் நகர்ப் பகுதியில் உள்ள சாலைகள் அதிக போக்குவரத்து நெரிசல் மிகுந்தவையாக இருக்கின்ற காரணத்தினால், போக்குவரத்து இடையூறுகள் இருக்கின்றன என்பதைக் கழக ஆட்சியிலே மாண்புமிகு தலைவர் அவர்கள் அறிந்த காரணத்தினாலேதான், சென்ற ஆண்டே இந்தப் பணிகள் அரசின் சார்பாக எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. ஏறத்தாழ இந்தப் புறவழிச் சாலையை 3 கி.மீ. தூரம் வரை போட வேண்டும். ஆகவே, அரசால் முடிவு செய்யப்பட்டு, அதற்கான திட்ட அறிக்கை தயார் செய்வதற்காக 11 இலட்சம் ரூபாய் பணம் ஒதுக்கப்பட்டு, திட்ட அறிக்கைகள் தயாரிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. அதுமுடிந்த உடனேயே புறவழிச் சாலை அமைப்பதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியோடு நிதி ஒதுக்கப்பட்டு, இந்த நிதியாண்டிலே முடிந்த வரை அந்தப் பணிகளை முடிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. அப்துல் சமது அவர்கள்.*

திரு. ப. அப்துல் சமது: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணப்பாறை நகரத்தில் போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கிறது. அந்த நகரத்தில் கனரக வாகனங்கள் அதிகமாக வருகின்ற காரணத்தினால், போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கின்றது. கனரக வாகனங்கள் புறவழிச் சாலை*

வழியாகச் செல்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்துவதற்காக, புறவழிச் சாலை அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை நீண்டநாட்களாக எழுந்து, தேர்தல் அறிக்கையிலும் இது வாக்குறுதியாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தப் புறவழிச் சாலையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அமைத்துத் தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு பொறுப்பேற்ற உடனே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய நகர்ப் பகுதிகளில் போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கிற காரணத்தினால், அந்த நகர்ப் பகுதிகளை கணக்கெடுத்து புறவழிச் சாலை அமைக்க வேண்டும் என்று எங்கள் துறைக்கு முதல் உத்தரவு பிறப்பித்தார்கள். அந்த வகையில்தான், இந்த ஆட்சி பொறுப்பேற்ற உடனே, பல்வேறு நகரங்களுக்குப் புறவழிச் சாலைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. கடந்த ஆண்டு, 4 நகரங்களுக்குப் புறவழிச் சாலைகள் அமைக்கப்பட்டன. இந்த ஆண்டில் 4 நகரங்களுக்குப் புறவழிச் சாலை அமைக்கின்ற பணிகள் நடைபெற்றுக்கொண்டு வருகின்றன. அதனைத் தொடர்ந்து, மாண்புமிகு உறுப்பினர் கோரிய மணப்பாறை புறவழிச் சாலை கட்டாயம் அமைக்கப்பட வேண்டிய சாலையாக இருக்கிறது. வருங்காலங்களில் அரசின் நிதிநிலைமைக்கேற்ப அது கட்டாயம் அமைத்துத் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 124, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். வைத்திலிங்கம், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

124—

சட்டக் கல்லூரி

***10080—திரு. ஆர். வைத்திலிங்கம்:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—